பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 05 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சுயசார்பு நிலையை அடைவது முக்கியமானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** ஜனநாயகத்தின் அடித்தளங்களை வலுப்படுத்துவதில் அரசியல் சாசனமும், நீதித்துறையும் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**3.** தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இதில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்கவுள்ளனர்.

**4.** சட்டப்பேரவையில் திமுக கட்சித் தலைவராக திரு உதயநிதி ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**5.** ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி **5** விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சுயசார்பு நிலையை அடைவது முக்கியமானது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் நேற்றிரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், உள்ளூர் பொருட்களை வாங்க மக்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மக்கள் எரிபொருள் நுகர்வை முடிந்த அளவு குறைத்து அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க உதவ வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

விவசாயிகள் நலனில் அரசு அதிக அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

மத்திய அரசின் செயல்பாடுகள் காரணமாக நாடு முழுவதும் பிஜேபியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

மேற்குவங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் இது எதிரொலித்துள்ளதாக அவர் கூறினார்.

காங்கிரஸ் கட்சி ஊழலையும், வாரிசு அரசியலையும் ஊக்குவித்து வந்துள்ளதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

ஜனநாயகத்தின் அடித்தளங்களை வலுப்படுத்துவதில் அரசியல் சாசனமும், நீதித்துறையும் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சொலிசிட்டர் ஜெனரல் திரு. துஷார் மேத்தா எழுதிய நூல் வெளியீட்டு விழாவில் நேற்று அவர் பங்கேற்றார்.

நமது அரசியல் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகத்தின் வேர்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் உரிமைகளைக் காப்பதில் நீதிமன்றங்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் அவர் கூறினார்.

நீதித்துறையும், நிர்வாகமும் இணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

பல்வேறு அமைப்புகளுக்கு இடையே உள்ள ஒருங்கிணைப்பே ஜனநாயகத்தை மேலும் வலுவானதாக்கும் என்று திரு. அமித் ஷா கூறினார்.

இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

இதில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு இடைக்கால அவைத் தலைவர் திரு கருப்பையா பதவி பிரமாணம் செய்து வைக்கிறார்.

சட்டப்பேரவை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதற்கான தேர்தல் ஆணையத்தின் சான்றிதழுடன் இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பேரவைத் தலைவர் மற்றும் பேரவை துணைத்தலைவருக்கான தேர்தல் நாளை காலை ஒன்பதரை மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், சட்டப்பேரவையில் திரு. விஜய் நம்பிக்கை வாக்கு கோரவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு நிகழ்ச்சிகளில் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடப்படும் நடைமுறையே இனி

கடைபிடிக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நேற்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில் மத்திய அரசின் சுற்றறிக்கையின்படி செயல்பட வேண்டிய பொறுப்பு ஆளுநருக்கு இருப்பதாக ஆளுநர் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

அதன்படி தவிர்க்க முடியாத சூழலில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மூன்றாவதாக ஒலிக்கப்பட்டது என்று கூறியுள்ளார்.

இனி வரும் காலங்களில் இந்த புதிய நடைமுறை பின்பற்றப்படாது என்றும், இதற்கு முன்பிருந்த நடைமுறையே பின்பற்றப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மட்டுமல்லாமல் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் அந்தந்த மாநில மொழி வாழ்த்துப் பாடலே நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இசைக்கப்பட வேண்டும் என்பதே தமிழக வெற்றிக் கழகத்தின் நிலைப்பாடு என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. ஆதவ் அர்ஜுனா கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னதாக இந்த விவகாரத்தில் பழைய நடைமுறையே பின்பற்றப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் வலியுறுத்தி இருந்தன.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவையின் திமுக கட்சித் தலைவராக திரு உதயநிதி ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்ற அக்கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துணைத்தலைவராக திரு கே என் நேருவும், கொறடாவாக திரு ஏ வ வேலுவும் இக்கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டனர்.

இதனிடையே சமூக வலைதளத்தில் திரு. உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், புதிய அரசுக்கும், முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய்க்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும், சமூக ஊடகங்களிலும் ஆற்றல்மிகு எதிர்க்கட்சியாக திமுக செயல்பட்டு மக்களின் குரலை எதிரொலிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைத்து மக்களுக்கும், அரசுக்கும் இடையிலான ஊடகமாக திமுக விளங்கும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் தவெக அரசு தேர்தல் வாக்குறுதிகளை மீறுவது ஏற்புடையதல்ல என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தவெக-வின் தேர்தல் அறிக்கையில் மாதத்திற்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தற்போது 2 மாத த்திற்கு 200 யூனிட் இலவசம் என்று அறிவித்திருப்பது தேர்தல் வாக்குறுதிக்கு முரணாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளை வாரி வழங்குவதையும், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதை செயல்படுத்த மறுப்பதையும் அடிப்படையாகக் கொண்டிருந்த திமுக அரசின் நீட்சியாகவே இது அமைந்துள்ளது என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற தவெக அரசு முன்வர வேண்டும் என்று திரு. டி.டி.வி. தினகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி தபால் வாக்குகளை வேறு தொகுதிக்கு அனுப்பியதாக கூறப்படும் புகார் குறித்து தேர்தல் ஆணையம் பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இத்தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் திரு. கே.ஆர். பெரியகருப்பனை, தவெக வேட்பாளர் திரு. சீனிவாச சேதுபதி ஒரு வாக்கு வித்தியாசத்தில் வென்ற நிலையில், இது தொடர்பாக திரு. பெரியகருப்பன் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் விக்டோரியா கௌரி மற்றும் செந்தில் குமார் அடங்கிய விடுமுறைக்கால அமர்வில் அவசர வழக்காக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் பதிவான தபால் வாக்கு, திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர்

தொகுதிக்கு தவறுதலாக அனுப்பப்பட்டதாகவும், இது தொடர்பான புகாரை தேர்தல் ஆணையம் பரிசீலிக்கவில்லை என்றும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனை விசாரித்த நீதிபதிகள் தபால் வாக்கை வேறு தொகுதிக்கு அனுப்பியது குறித்து பதிலளிக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பியதுடன், இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் பதிலளிக்க உத்தரவிட்டனர்.

இதற்கான காரணங்களை விளக்கி இன்று பதில்மனு தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை இன்றைய தினத்திற்கு ஒத்திவைத்தனர்.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மூன்று நாள் சண்டைநிறுத்தம் மீறப்பட்டது தொடர்பாக ரஷ்யாவும்-யுக்ரைனும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துள்ளன.

------------

உத்தராகண்ட் மாநிலத்தில் நிலவும் மோசமான வானிலை காரணமாக சார்தாம் யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

------------

திருச்சியில் சரித்திரப்பதிவேடு குற்றவாளிகளை வரவழைத்து இனி குற்றச் செயல்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. செல்வநாகரத்தினம் எச்சரிக்கை விடுத்தார்.

------------

திருத்தணியில் திரௌபதி அம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற தீ மிதி திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

------------

சென்னை - திருவனந்தபுரம் விரைவு ரயில் இம்மாதம் 15 மற்றும் 22ஆம் தேதிகளில் கோட்டயம் வழியாக இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

ராய்ப்பூரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 7 விக்கெட் இழப்புக்கு 166 ரன் எடுத்தது.

167 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 167 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

முன்னதாக சென்னையில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் சென்னை அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்ற சென்னை அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 203 ரன் எடுத்தது.

Josh Inglis அதிரடியாக ஆடி 33 பந்துகளில் 85 ரன் குவித்தார்.

204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த சென்னை அணி 19 புள்ளி இரண்டு ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 208 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**<<<<The End>>>>**